டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 17.04.2026 வெள்ளிக்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 248 - Madurai | Online Edition

# தமிழக உள் மாவட்டங்களில் 5 டிகிரி வரை வெப்பநிலை உயர வாய்ப்பு!

சென்னை, ஏப்.16

தமிழகத்தின் உள் மாவட்டங்களில் அதிகபட்ச வெப்பநிலை ஏப்.20 வரை வழக்கத்தை விட 5 டிகிரி வரை உயரக்கூடும்.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வடகிழக்கு மத்தியப் பிரதேசம் முதல் மன்னார் வளைக்குடா வரை, விதர்பா, மரத்வாடா, உள் கர்நாடகா மற்றும் தமிழகம் வழியாக ஒரு வளிமண்டல காற்றழுத்த தாழ்வு பாதை நிலவுகிறது.

இதன் காரணமாக இன்று முதல் 22-ம் தேதி வரை மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், டெல்டா மாவட்டங்களின் கடலோர பகுதிகள் மற்றும் ராமநாதபுரம் மாவட்டத்தில் ஓரிரு இடங்களிலும், காரைக்கால் பகுதிகளிலும் லேசான மழை பெய்யக்கூடும். இதர தமிழகம் மற்றும் புதுச்சேரியில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.

உள் தமிழக மாவட்டங்களில் நாளை முதல் 20-ம் தேதி வரை அதிகபட்ச வெப்பநிலை ஒருசில இடங்களில் வழக்கத்தை விட 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை அதிகமாக இருக்கக்கூடும்.

கடலோர தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை வழக்கமான அளவை ஒட்டியே இருக்கக் கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்று கூறப்பட்டுள்ளது.

# கோடை கால பயிர்களுக்கு தேவையான உரங்கள் இருப்பு உள்ளது

## விவசாயிகள் ஒருங்கிணைந்த உர நிர்வாகம் கடைப்பிடிக்க வேளாண் துறை அறிவுறுத்தல்



பெரம்பலூர், ஏப்.16

பெரம்பலூர் மாவட்டத்தில் தற்போது வேளாண்மை பயிர்களான, மக்காச் சோளம் 2450 ஹெக்டர், பயிர் வகை பயிர் 106 ஹெக்டர், எண்ணெய் வித்து பயிர் 1458 ஹெக்டர், நெல் பயிர் 2254 ஹெக்டர் மற்றும் தோட்டக்கலை பயிர்களான சின்ன வெங்காயம் 6534 ஹெக்டர், மரவள்ளிக் கிழங்கு 2011 ஹெக்டர், மஞ்சள் 615 ஹெக்டர் மற்றும் மிளகாய் 132 ஹெக்டர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.

தற்போது மாவட்டத்தில் யூரியா 2577 மெட்ரிக் டன், டிஏபி 1314 மெட்ரிக் டன், பொட்டாஷ் 454 மெட்ரிக் டன், காம்ப்ளக்ஸ் உரம் 5694 மெட்ரிக் டன், சூப்பர் பாஸ்பேட் 497 மெட்ரிக் டன் என மாவட்டத்திற்கு போதுமான அளவு இருப்பில் உள்ளது என்று பெரம்பலூர் மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் பாபு தெரிவித்தார்.

மேலும், வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு அக்ரி டாக்டர் ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளதாவது, பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள உரம் விற்பனையாளர்கள் உரங்களை பி ஓ எஸ் இயந்திரம் மூலம் மட்டுமே விற்பனை செய்ய வேண்டும், விவசாயிகளுக்கு யூரியா உரங்களை அதிக மாக கொடுக்கக் கூடாது. யூரியா உரங்களை விற்பனை செய்யும் போது கண்டிப்பாக பில் முகவரியுடன் விவசாயியின் தொலை பேசி எண்ணுடன் விவசாயியின் கையொப்பம் பெற்று கொடுக்க வேண்டும். உரம் விற்பனை நிலையத்தில் உரம் இருப்பு மற்றும் விலைப்பட்டியலை அவசியம் பராமரிக்க வேண்டும்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.



எப்பொழுதும் விற்பனை நிலையத்தில் இருப்பு உரங்கள் சரியாக வைத்துக் கொள்ள வேண்டும். உரம் வைத்திருக்கும் கிடங்குகளுக்கு அவசியம் அனுமதி பெற்றிருக்க வேண்டும். அனுமதி பெற்றுள்ள உரங்களை மட்டுமே விற்பனை செய்ய வேண்டும் என்று கூறினார். மேலும் விவசாயிகள் யூரியா உரத்தை அதிகமாக பயன்படுத்தக்கூடாது.

அடி உரமாக பயன்படுத்தக்கூடாது, அடி உரமாக காம்ப்ளக்ஸ் உரங்களையும் பயன்படுத்த வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் யூரியா உரம் கலைக்கொல்லியுடன் சேர்த்து பயன்படுத்தக் கூடாது. விவசாயிகள் அவர்களின் பயிர் சாகுபடி பரப்புக்கு ஏற்ற வகையில் மட்டுமே யூரியாவை பயன்படுத்த வேண்டும். அதிகபட்சமாக ஒரு ஏக்கருக்கு யூரியா இரண்டு மூட்டைக்கு மேல் பயன்படுத்த வேண்டாம். தழைச்சத்துக்காக யூரியாவுக்கு பதிலாக நானோ யூரியா பயன்படுத்தலாம்.

விவசாயிகள் உரங்களை எப்பொழுதும் பயிருக்கு ஒருங்கிணைந்த உர நிர்வாகத்துடன், சமச்சீர் உரங்கள் ஆன அனைத்து வகையான வேளாண்மை இயற்கை எரு, பண்ணை மற்றும் மண்புழு எரு உரம், பசுந்தால் பயிரை மடக்கி உழவு செய்தல், வேளாண்மை வட்டார மையத்தில் கிடைக்கக்கூடிய அனைத்து வகையான உயிர் உரங்கள், அசோலா நீலப்பச்சை பாசி, அனைத்து வகையான பயிர்களுக்கு தேவையான நுண்ணூட்ட சத்து உரங்களை சரியான விதத்தில் பயன்படுத்த வேண்டும்.

இவ்வாறு பயன்படுத்துவதால் பயிருக்கு வழங்கப்படும் உரம் அளவை குறைத்து, மண்ணின் வளம் அதிகரித்து உர செலவு குறைத்து அதிக மகசூல் பெறலாம் என்று வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு அக்ரி டாக்டர் ராதாகிருஷ்ணன் கூறினார்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# உறையவைத்து உலர்ந்த காய்கறிகள் சிப்ஸ் *Freeze Dried vegetables chips* - ஒரு பார்வை

உறையவைத்து உலர்ந்த காய்கறிகள் சிப்ஸ் (Freeze Dried vegetables chips) தொடர்பான நன்மைகள் மற்றும் தீமைகள் குறித்த மிக ஆழமான பார்வை!

Freeze-dried vegetable chips குறித்து மிகத் துல்லியமான ஆய்வின் அடிப்படையில் சொன்னால், இவை சாதாரண வெப்ப உலர்த்திய snacks-களைவிட ஊட்டச்சத்து, நிறம், அமைப்பு, shelf-life ஆகியவற்றில் பொதுவாக மேலானவை. ஆனால் விலை, சேமிப்பு நிபந்தனை, மற்றும் சில தயாரிப்புகளில் உப்பு/எண்ணெய்/சேர்க்கைப் பொருட்கள் ஆகியவை முக்கிய குறைபாடுகள். Freeze-drying குறைந்த வெப்பத்தில் vacuum மூலம் ஈரத்தை நீக்கும் முறை. இதனால் heat-sensitive nutrients நல்ல அளவில் தங்கும், ஆனால் சேமிப்பின்போது oxygen/ moisture இருந்தால் சில compounds degrade ஆகலாம்.

## முறையின் இயல்பு

Freeze-drying என்பது food–ஐ முதலில் உறையவைத்து, பின்னர் குறைந்த அழுத்தத்தில் ice–ஐ நேரடியாக vapor ஆக மாற்றும் முறை. இதனால் செல்களின் அமைப்பு, porous texture, மற்றும் rehydration திறன் நன்றாக தங்கும். அதே நேரத்தில் heat damage குறைவாக இருப்பதால் பல phytochemicals பாதுகாக்கப்படுகின்றன.

## முக்கிய நன்மைகள்

- Vitamin C, antioxidants, phenolics போன்ற heat-sensitive nutrients–ஐ வெப்ப உலர்த்தலைவிட அதிகமாக காக்கும் வாய்ப்பு உள்ளது.

– Crunchy texture, lighter weight, better shape retention காரணமாக snack form–ல் consumer acceptability அதிகமாக இருக்கலாம்.

- Shelf-life நீளமானது; moisture குறைவதால் microbial growth குறையும், storage–ல் transport எளிதாகும்.

– காய்கறியின் fiber, minerals பெரும்பாலும் தங்கி இருக்கும்; ஆகவே processed snack என்றாலும் raw vegetable–க்கு நெருக்கமான profile கிடைக்கலாம்.

**முக்கிய தீமைகள்**

– Freeze-drying process energy-intensive அதனால் இறுதி product விலை அதிகமாகும், இது பெரிய practical drawback .

– Storage நேரத்தில் air/moisture exposure ஏற்பட்டால் oxidation அதிகரித்து carotene, vitamin C போன்றவை குறையலாம்.

– "Vegetable chips" என்ற பெயரில் விற்கப்படும் சில products–ல் salt, oil, sugar, flavors, preservatives சேர்க்கப்படலாம்; அப்போது health advantaஆள குறைந்து விடும்.

– சில high-water-content vegetables freeze-dry ஆன பிறகு flavor/texture எதிர்பார்த்த அளவில் இருக்காமல் போகலாம்; all vegetables equally suitable அல்ல.

**உண்மை அடிப்படையிலான மதிப்பீடு**

ஆய்வுக் கணிப்பில் freeze-dried vegetable chips-n "healthy" என்று சொல்வது நிபந்தனை சார்ந்தது ingredient list சுத்தமாக இருந்தால், low-salt/low-additive தயாரிப்புகள் நல்ல snack ஆக இருக்கலாம். ஆனால் ultra-processed formulations, high sodium, added fats, அல்லது sweeteners இருந்தால் அது சாதாரண chips–க்கு நிகராக அல்லது அதைவிட மோசமாக கூட மாறலாம்.

**யாருக்கு பயனாகும்**

– பயணம், emergency storage, office snacking, குழந்தைகளுக்கு vegetable exposure அதிகரிக்க வேண்டிய சூழல் ஆகியவற்றில் பயனுள்ளது.

– Vitamin-sensitive diet, lightweight shelf-stable foods தேவைப்படும் சூழல் ஆகியவற்றுக்கும் பொருத்தம் அதிகம்.

– ஆனால் fresh vegetables–ஐ நேரடியாக மாற்றுவது அல்ல; nutrient density நல்லது என்றாலும் water content, satiety, chewing load, freshness advantages ஆகியவை fresh vegetables-இல் அதிகம்.

**வாங்கும்போது பார்க்க வேண்டியது**

– Ingredient list : “100% vegetable” அல்லது மிகக் குறைந்த ingredients.

– Sodium : குறைவாக இருக்க வேண்டும்.

– Oil/sugar/additives : இல்லாமல் அல்லது மிகக் குறைவாக இருக்க வேண்டும்.

- Packaging : moisture/oxygen barrier நல்லதாக இருக்க வேண்டும்.

- Expiry and storage : airtight sealing முக்கியம்.

**சுருக்க மதிப்பு**

மொத்தத்தில், freeze-dried vegetable chips என்பது healthier snack option ஆக இருக்க முடியும் ஆனால் அது “ஒரே மாதிரியான superfoo” அல்ல. தரமான, minimal-processed, low-salt வகைகள் நல்ல தேர்வு ; ஆனால் flavored/processed versions-ஐ கவனமாக பார்க்க வேண்டும்.

தொகுப்பு : *G.சுரேஷ்குமார், ஆசிரியர் ஓய்வு, கோவில்பட்டி.*

# எலுமிச்சை பழம் விலை கடும் உயர்வு!

தென்காசி, ஏப்.16

தென்காசி மாவட்டம் புளியங்குடி, சிவகிரி, கடையநல்லூர், வாசுதேவநல்லூர், கடையம், சிங்கிலிபட்டி, சங்கரன்கோவில் உள்ளிட்ட பகுதிகளில் சுமார் 20 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் எலுமிச்சை சாகுபடி செய்யப்படுகிறது. ஆனால், கடந்த ஆண்டு போதுமான மழை இல்லாததால் எலுமிச்சை விளைச்சல் குறைந்துள்ளது.

40 டன் விளைச்சல் எதிர்பார்க்கப்பட்ட நிலையில், 20 டன் அளவுக்கே இருக்கிறது. அதனால், வரத்தும் 50 சதவீதம் சரிந்துள்ளது. இதனால், எலுமிச்சை விலையும் அதிகரித்து ஒரு கிலோ ரூ.170 என விற்பனையாகிறது.

ஜூன் 15-ந் தேதி வரை எலுமிச்சை சீசன் இருந்தாலும், விளைச்சல் குறைவால் இன்னும் விலை அதிகரிக்கவே வாய்ப்பு இருப்பதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

# 2வது முறையாக நூல் விலை அதிகரிப்பு

திருப்பூர், ஏப்.16

நடப்பு மாதத்தில் 2வது முறையாக நூல் விலையில் அனைத்து ரகங்களுக்கும் ரூ.10 அதிகரித்துள்ளது. பஞ்சு தட்டுப்பாடு மற்றும் உலகளாவிய சந்தை அழுத்தங்கள் காரணமாக நூல் விலை கிலோவுக்கு ரூ.7 முதல் ரூ.10 வரை உயர்ந்துள்ளது. கடந்த நான்கு மாதங்களில் மட்டும் ரூ.34 வரை நூல் விலை அதிகரித்துள்ளது குறிப்பிடத்தக்கது.



# கோடை உழவு கோடி நன்மை



புதுக்கோட்டை, ஏப்.16

புதுக்கோட்டை மாவட்டத்தில் தற்பொழுது கோடையில் பெறப்படும் மழையினைப் பயன்படுத்தி கோடை உழவு மேற்கொண்டு விவசாயிகள் பயனடைய வேண்டும் என புதுக்கோட்டை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் மு.சங்கரலட்சுமி ஆலோசனை தெரிவித்துள்ளார்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் தற்போது சித்திரைப் பட்டத்தில் பெறப்படும் கோடை மழையினைப் பயன்படுத்திக் கோடை உழவு மேற்கொள்வது மிகவும் அவசியமாகும். ஏனெனில், கோடையில் மேல் மண் அதிக சூரிய வெப்பத்தால் வெப்பமடைகிறது. இந்த வெப்பம் கீழ்ப்பகுதிக்குச் செல்லும் பொழுது நிலத்தடி நீர் ஆவியாகி வெளியேறிவிடும். மேல் மண்ணை உழவு செய்து ஒரு புழுதிப் படலம் அமைத்துவிட்டால் விண்வெளிக்கும் வேர்சூழ் மண்டலத்திற்கும் தொடர்பு அறுந்துவிடும். இதனால் நிலத்தில் உள்ள ஈரம் ஆவியாக விடாமல் இப்புழுதிப் படலம் தடுத்து விடும்.

'சித்திரை மாதத்துப் புழுதி பத்தரை மாற்றுத் தங்கம்' என்பது பழமொழி. கோடை மழையின் ஈரத்தைப் பயன்படுத்தி நிலத்தை நன்கு உழவு செய்வதால் நன்மைகள் பல கிடைக்கும்.

● கோடை உழவு செய்வதால் மேல் மண் துகள்களாகிறது. இதனால், நிலத்தில் நீர் இறங்கும் திறன் அதிகரிக்கும்.

● கோடை உழவு செய்வதால் மண்ணில் நல்ல காற்றோட்டம் கிடைப்பதனால் மண்ணில் நுண்ணுயிரிகளின் செயல்பாடு அதிகமாகி மண்வளம் பெருகும்.

● வயலிலுள்ள கோரை போன்ற களைகள், கோடை உழவு செய்வதனால் மண்ணின் மேற்பரப்புக்குக் கொண்டுவரப்பட்டு சூரிய வெப்பத்தில் நன்கு காய்ந்து கட்டுப்படுத்தப்படுகிறது.

● ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் மேலாண்மையில் கோடை உழவு செய்வது மிகவும் முக்கிய தொழில்நுட்பமாகும்.

கோடை உழவு செய்வதனால் நிலத்தினடியில் உள்ள கூண்டுப் புழுக்கள் மற்றும் தீமை செய்யும் பூச்சிகள் வெளியில் கொண்டு வரப்பட்டு அழிக்கப்படுகிறது.

மிக முக்கியமாக மக்காச் சோளத்தை தாக்கும் அமெரிக்க படைப்புழுவினை கட்டுப்படுத்திட கோடை உழவு மிகவும் சிறந்தது. இதனால் வரும் பருவத்தில் பூச்சி நோய்த் தாக்குதல் பெருமளவு குறைகிறது.

● கோடை உழவினைச் சரிவிற்குக் குறுக்கே உழவு செய்து மண் அரிப்பினை தவிர்க்கலாம். கோடை உழவு செய்யாத நிலத்தில் நீர் வேகமாக வழிந்தோடி மண் அரிப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளது.

● வயல்வெளிகளில் பெய்யும் மழை நீரை சேமிப்பதில் கோடை உழவு முக்கிய பங்கு வகிக்கிறது.

இவ்வாறு பல நன்மைகள் கோடை உழவினால் ஏற்படுவதால் ’கோடை உழவு கோடி நன்மை‘ எனக் கூறப்படுகிறது.

எனவே, புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் கோடையில் பெறப்படும் மழையினைப் பயன்படுத்தித் தங்களது நிலங்களில் மழை நீரை சேமித்திடவும், பூச்சி நோய் ஆகியவற்றை கட்டுப்படுத்திடவும் கோடை உழவு செய்து பயன்பெறுமாறு புதுக்கோட்டை வேளாண்மை இணை இயக்குநர் மு.சங்கர லட்சுமி ஆலோசனை தெரிவித்துள்ளார்.




# இராமநாதபுரத்தில் 1413 விதை மாதிரிகள் பரிசோதிக்க நடப்பாண்டு இலக்கு

இராமநாதபுரம், ஏப்.16

நடப்பாண்டு 1,413 விதை மாதிரிகள் பரிசோதிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக பரமக்குடி விதை பரிசோதனைஅலுவலர் சிவகாமி தெரிவித்தார். அவர் கூறியதாவது, பரமக்குடி விதை பரிசோதனை நிலையத்தில் பயிரிடப்படும் அனைத்து தானிய விதைகள், காய்கறி, பயறு வகை, எண்ணெய் வித்து மற்றும் பருத்தி விதைகள் பரிசோதனை செய்து ஆய்வறிக்கை வழங்கப்படுகிறது.

இங்கு விதை தரக் காரணிகளான முளைப்புத்திறன், புற, இன தூய்மை விதையின் ஈரப்பதம், பிறரக கலப்பு, பூச்சி மற்றும் நோய்கள் தாக்கப்பட்ட விதைகளின் விபரம் குறித்த ஆய்வு நடத்தப்படுகிறது. விதை சட்டம் 1966 பிரிவு 7ன் படி ஒவ்வொரு பயிருக்கும் குறைந்தபட்ச முளைப்புதிறன் தரம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

அதன்படி நெல் மற்றும் எள்ளுக்கு குறைந்தபட்ச முளைப்புத் திறன் 80 சதவீதமும், பாசிப்பயறு, உளுந்து, துவரை, தட்டைபயறு, அவரை, பீன்ஸ் 75 சதவீதமும், நிலக்கடலை, சூரியகாந்தி, தக்காளி, கத்தரி, கீரைக்கு 70 சதவீதமும், காரட், பீட்ரூட், பாகல், புடலை, பீர்க்கை, சுரை மற்றும் மிளகாய்க்கு 60 சதவீதமும் இருக்க வேண்டும். தரமான விதைகளை பயன்படுத்தும் போது விதைகளின் முளைப்புத்திறன் அதிகரிப்பதோடு, நல்ல வீரியமான நாற்றுகளும், போதிய பயிர் எண்ணிக்கையும் பராமரிக்கப்பட்டு அதிக மகசூல் பெறலாம்.

2025-2026ம் ஆண்டில் 1,413 விதை மாதிரிகள் பரிசோதிக்க இலக்கு நிர்ணயித்து, சான்று விதை மாதிரிகள் 295, ஆய்வாளர் விதை மாதிரிகள் 614, பணி விதை மாதிரிகள் 594 என 1,503 விதை மாதிரிகள் பரிசோதனை செய்யப்பட்டு, அவற்றில் சான்று விதை மாதிரிகள் 24, ஆய்வாளர் விதை மாதிரிகளில் 21, பணி விதை மாதிரிகள் 37 என 82 விதை மாதிரிகள் தரமற்றவை என கண்டறியப்பட்டு விவசாயிகளுக்கு வினியோகம் செய்வது தடுக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு விவசாயியும் சாகுபடி செய்ய வாங்கும் விதை களையோ அல்லது தங்கள் கைவசம் உள்ள விதைகளையோ முளைப்புத்திறன் அறிந்து பயன்படுத்த வேண்டும். விதையின் தரம் அறிய ஒரு விதை மாதிரிக்கு ஆய்வுக் கட்டணம் ரூ.80/- செலுத்த வேண்டும் என்றார்.

Rithvik Pipe

IS 4985 : 2021 IS 9537

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்**
  நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# இன்சுலின் செடி (மூலிகை பயிர்) - ஒரு பார்வை



இன்றைய கால கட்டத்தில பெரும்பாலானவர்கள் சர்க்கரை நோயால் (DIABETES) பாதிக்கப் பட்டுள்ளனர். அவர்களுக்கு இயற்கையான மருந்தாக இது பயன்படுகிறது என்பதால் இந்த செடிக்கு இன்சுலின் செடி (INSULIN PLANT) என்ற பெயரே இன்று வரை நிலைத்து உள்ளது.

இதனுடைய தாயகம் பிரேசில், மலைகாடுகளில் வளரக் கூடியது. அதிக பட்சமாக 10 அடி வரை உயரத்திற்கு மேல் வளரக் கூடியது.

இதனுடைய அறிவியல் பெயர் காஸ்டஸ் பிக்டஸ் (COSTOS PIDATUS). கோஸ்டேசி குடும்பத்தை சார்ந்த தாவரம். இதை தமிழில் சர்க்கரை கொல்லி' என்று அழைக்கப்படுகின்றது.

**வளர்ப்பு முறை**

இந்த செடியை வளர்க்க 3 கணுக்கள் உள்ள செடியை தாய் செடியிலிருந்து பிரித்து எடுத்து 2-3 அங்குல ஆழத்தில் நட வேண்டும். பொதுவாக நல்ல வடிகால் வசதியுடைய இரு மண் பாடு நிலங்களிலும் வீட்டு தோட்டத்திலும் இந்த செடியை வளர்க்கலாம். சூரிய ஒளி 2-3 மணி நேரம் பட்டாலே போது மானது. செடியை பிரித்து எடுத்து விடுவதன் மூலமாக அதிக அளவாக செடிகளை உருவாக்கலாம்.

**உரமிடுதல்**

மக்கிய தொழு உரத்தை இடவேண்டும். மருத்துவ குணமுள்ள செடியாக இருப்பதால் இரசாயன உரங்களையும், பூச்சி மருந்துகளையும் தெளிக்க கூடாது. தண்ணீர் எக்காரணம் கொண்டு தேங்க கூடாது. ஒரு முறை நட்டு பாரமரித்தாலே போதும் புதர் போல மண்டி வளர்ந்து இருக்கும்.

ஆர்கானிக் சர்டிஃபிகேட் இருந்தால் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யலாம். சாகுபடி பின்செய் நேர்த்தி மற்ற பயிர்களுக்கு செய்வது போல தான்.

**மருத்துவ பயன்**

இது சர்க்கரை நோயாளிகளுக்கு ஏற்றதாக இயற்கையான மூலிகை, தினமும் இரண்டு இலைகளை பறித்து பச்சையாக சாப்பிடுகையில் அவர்களது உடம்பில் உள்ள இரத்தத்தின் சர்க்கரை அளவு கணிசமாக குறையும்.

சர்க்கரை நோயாளி களுக்கு இதை விட மாற்று மருந்து எதுவும் இல்லை என ஐரோப்பியா, அமெரிக்கா விஞ்ஞானிகள் கூறியுள்ள தரவுகள் உள்ளன. இன்சுலின் செடியின் இலையில் உள்ள சாறு தான் இரத்தத்தில் உள்ள சுகர் லெவலை குறைக்கும்.

இதனை நன்றாக உலர்த்தி (SHADE DRYING) இலைகள் காயவைத்து பொடியாக்கியும் பயன்படுத்தலாம். தேநீர், குளிர்பானங்களில் கலந்து சாப்பிடலாம். 16 கிலோ இலையை காய வைத்தால் 1 கிலோ பொடியாக மாறும். இது (NATURAL DIABETES CARE).

தகவல் : அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.



# நவீன வேளாண்மையில் பூனைக்காலி சாகுபடி

மானாவாரி முறையில் ஒரு ஏக்கர் பரப்பில் பூனைக்காலி சாகுபடி செய்ய கடைப்பிடிக்கும் முறைகள் வருமாறு :

பூனைக்காலியை மழைப்பொழிவைப் பொறுத்து அனைத்துப் பட்டங்களிலும் சாகுபடி செய்யலாம். தேர்வு செய்த ஓர் ஏக்கர் நிலத்தை 10 நாள்கள் இடைவெளியில் 3 முறை உழவு செய்ய வேண்டும். இராண்டவது உழவின் போது 3 டிராக்டர் மட்கிய தொழுவுரம் போட்டு உழவு செய்ய வேண்டும். பிறகு 3 அடி முறை உழவு செய்யவேண்டும். பிறகு 3 அடி இடைவெளியில் ஒரு அங்குலம் ஆழத்தில் குழி எடுத்து குழிக்கு 3 விதைகள் வீதம் விதைக்க வேண்டும்.

ஒரு ஏக்கர் நிலத்துக்கு 15 கிலோ வரை விதை தேவைப்படும். விதைத்த 6 முதல் 8 நாட்களில் முளைப்பு தெரியும். விதைத்த 20ம் நாட்களில் ஒவ்வொரு செடியின் தூரிலும் ஒரு கைப்பிடி மண்புழு உரம் வைக்க வேண்டும். விதைத்த 25-ம் நாள் களை எடுத்து 10 லிட்டர் தண்ணீருக்கு 300 மில்லி மீன் அமினோ அமிலம் என்ற அளவில் கலந்து தெளிக்க வேண்டும்.

விதைத்த 35-ஆம் நாள் 10 லிட்டர் தண்ணீருக்கு 500 மில்லி எருக்குக்கரைசல் என்ற அளவில் கலந்து தெளிக்க வேண்டும். விதைத்த 45-ஆம் நாள் 10 லிட்டர் தண்ணீருக்கு 300 மில்லி இ.எம். கரைசல் என்ற அளவில் கலந்து தெளிக்க வேண்டும். விதைத்த 50-ம் நாள் இரண்டாவது முறை களை எடுக்க வேண்டும். விதைத்த 55-ம் நாள் 10 லிட்டர் தண்ணீருக்கு 500 மில்லி பஞ்சகவ்யா என்ற அளவில் கலந்து தெளிக்க வேண்டும்.

45-ஆம் நாளுக்கு மேல் கொடிகள் வேகமாகப் படரும். அந்தத் தருணத்தில் சாறு உறிஞ்சும் புழுக்களின் தாக்குதலால் கொடிகள் பாதிக்கப்படுவதற்கான வாய்ப்புகள் உண்டு.

அவற்றைக் கட்டுப்படுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக 10 லிட்டர் தண்ணீருக்கு 300 மில்லி மூலிகைப் பூச்சிவிரட்டி அல்லது 200 மில்லி இஞ்சி பூண்டு பச்சை மிளகாய்க் கரைசல் கலந்து தெளிக்கலாம்.


விதைத்த 55-ம் நாளுக்கு மேல் பூ பூத்து 70-ம் நாளுக்கு மேல் பிஞ்சு பிடிக்கும் விதைத்த 90-ம் நாளுக்கு மேல் காய்கள் காய்த்து 105-ம் நாளுக்கு மேல் காய்கள் முற்றி நெற்றுகளாக மாறி அறுவடைக்குத் தயாராகும். நெற்றுகள் முற்றி வெடிப்பதற்குள் அறுவடை செய்து விட வேண்டும். இல்லையென்றால் விதைகள் வீணாகி வீடும். நெற்றுகளை வெயிலில் காயவைத்தால் அவை தானாக வெடித்து விதைகள் உதிர்ந்து விடும். அவற்றைச் சுத்தப்படுத்தி விற்பனை செய்யலாம். அறுவடை செய்து நெற்றுகளைச் சாக்கில் கட்டி இரண்டு ஆண்டுகள் வரை இருப்பு வைக்கலாம்.



பூனைக்காலியின் பூ, விதை, வேர் என அனைத்தும் மருத்துவ குணம் உடையவை. குறிப்பாக இதன் விதைகள் சித்த மருத்துவத்தில் அதிகம் பயன்படுத்தப்படுகின்றன. கை, கால் நடுக்கம் நோய்க்கு இந்த விதை ஒரு நல்ல மருந்து. ஆண்மை குறைபாட்டை போக்குவதற்கும் பூனைக்காலி விதைகள் பயன்படும். இதை நன்றாக உலர வைத்துப் பொடி செய்து தினமும் காலை, மாலை இருவேளை காய்ச்சிய பசும்பாலில் 5 கிராம் அளவு கலந்து அருந்தி வந்ததால் ஆண்மை குறைபாடு சரியாகும்.

தகவல் : *T.யுவராஜா தட்சிணாமூர்த்தி, வேளாண்மை பொறியாளர். உடுமலைப்பேட்டை.*

# எள் அறுவடை பணிகள் தீவிரம்



புதுக்கோட்டை, ஏப்.16

புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை பகுதிகளில் உள்ள விவசாயிகள் நெல், கரும்பு, கடலை, சோளம், எள் போன்ற பயிர் செய்து வருகின்றனர். விவசாயிகள் தற்சமயம் எள் அறுவடை செய்து மகசூல் சேகரித்து வருகின்றனர்.

இது குறித்து விவசாயிகள் கூறியதாவது : எள் எதிர்பார்த்த மகசூல் இல்லை. விலையும் குறைவாகவே கிடைக்கிறது. எனவே எள்ளுக்கு அரசு குறைந்தபட்ச விலை நிர்ணயம் செய்ய வேண்டும். நெல் கொள்முதல் நிலையத்தை அரசு நடத்துவது போல் எள் கொள்முதல் செய்ய வேண்டும். அரசு கொள்முதல் செய்யும் எள் முறையாக விற்பனை செய்ய வேண்டும் என தெரிவித்தனர்.



# 16,121 மெட்ரிக் டன் இரசாயன உரங்கள் இருப்பு உள்ளது

## வேளாண் துறை தகவல்

திருச்சிராப்பள்ளி, ஏப்.16

யூரியா 4066 மெட்ரிக் டன், டிஏபி 2226 மெட்ரிக் டன், எம்.ஓ.பி 1366 மெட்ரிக் டன், காம்ப்ளக்ஸ் 7424 மெட்ரிக் டன் மற்றும் எஸ்.எஸ்.சி 1039 ஆக மொத்தம் 16,121 மெட்ரிக் டன் இரசாயன உரங்கள் தனியார் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது என திருச்சிராப்பள்ளி வேளாண்மை இணை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

நடப்பு பருத்திற்கு தேவையான இடுப்பொருட்கள் அந்தந்த பகுதியில் உள்ள வேளாண்மை விரிவாக்க மையங்களிலும், பூச்சிக்கொல்லிகள், இரசாயன உரங்கள் போதுமான அளவு தனியார் உர விற்பனை நிலையங்கள் மற்றும் கூட்டுறவு சங்கங்களில் இருப்பு வைக்கப்பட்டு விநியோகிக்கப்பட்டு வருகிறது.

மொத்த உர விற்பனையாளர்கள் வெளி மாவட்டங்களுக்கு உரங்களை மாற்றம் செய்யவோ, விற்பனை செய்யவோ கூடாது, மேலும், உரங்களை வெளி மாவட்டங்களிலிருந்து கொள்முதல் செய்யக்கூடாது, சில்லரை உர விற்பனையாளர்களுக்கு அனுப்பும் பொழுது உரிய விலை பட்டியல்கள் மற்றும் ஆவணத்துடன் உரங்களை வாகனங்களில் அனுப்ப வேண்டும்.

சில்லரை உர விற்பனையாளர்கள் விவசாயிகளுக்கு உரம் விற்பனை செய்யும் பொழுது கட்டாயமாக ஆதார் அட்டையைக் கொண்டு கைரேகை பதிவு செய்து வழங்க வேண்டும், விவசாயிகளுக்கு தேவைக்கு அதிகமாகவோ, ஒரே நபருக்கு அதிக அளவு உரமோ வழங்க கூடாது. குறிப்பிட்ட விவசாயிகளின் பெயரில் அதிகப்படியான உர விற்பனை செய்யப்பட்டது கண்டறியப்பட்டால் சில்லரை விற்பனை உரிமம் எந்த முன் அறிவிப்பும் இன்றி ரத்து செய்யப்படும் என தெரிவித்து கொள்ளப்படுகிறது.

விவசாயம் மேற்கொள்ளாத நபர்களுக்கு உர விற்பனை செய்–யக்கூடாது உரங்களின் இருப்பு மற்றும் விற்பனை விலை விவரங்களை தகவல் பலகையில் தினசரி எழுதி பராமரிக்க வேண்டும். மொத்த விற்பனையாளர்களிடம் சில்லரை விற்பனையாளர்கள் உரங்களை வழங்கும் போது, அதற்குரிய 'ஒ" படிவம் பெற்று இருப்பதுடன், உரத்திற்கான விலைப் பட்டியலுடன் பெறப்பட்டு, இருப்பு பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டும். தினசரி ஊணமுளு கருவி மூலம் உரங்களை விற்பனை செய்தவுடன், இருப்பு பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டும். ஆய்வின் போது மேற்காணும் குறைபாடுகள் கண்டறிப்பட்டால் உர விற்பனையாளரின் விற்பனை உரிமம் ரத்து செய்யப்படுவதுடன் குற்றவியல் வழக்கு தொடரப்படும்.

எனவே, திருச்சிராப்பள்ளி மாவட்ட உர விற்பனையாளரின் உரக் கட்டுப்பாடு ஆணை 1985 மற்றும் உர நுகர்வு கட்டுப்பாடு ஆணை 1973 ஆகியவற்றை மீறினால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என திருச்சிராப்பள்ளி மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் பூ.வசந்தா, தெரிவித்துள்ளார்.


# திருவண்ணாமலையில் 100.4 டிகிரி வெயில் பதிவு

திருவண்ணாமலை, ஏப்.16

திருவண்ணாமலை மாவட்டத்தில் கோடை வெயில் சதத்தை எட்டி வருகிறது. இதனால் பகலில் வீசும் அனல் காற்றும், இரவில் கடும் புழுக்கத்தாலும் பொதுமக்கள் தவித்து வருகின்றனர். மேலும் உடல் சூட்டை தணித்துக்கொள்ள மோர், தர்பூசணி, இளநீர் உள்ளிட்ட கடைகளுக்கு படையெடுத்து வருகின்றனர்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் வழக்கம் போல் நேற்றும் காலை முதலே சுளீரென சுட்டெரிக்க தொடங்கிய மாலை 4 மணி வரை பொதுமக்களை வாட்டி வதைத்தது. நேற்று 100.4 டிகிரி வெயில் வாட்டி வதைத்தது. இதனால் சாலைகள் வாகன ஓட்டிகள் இன்றி வெறிச்சோடி காணப்பட்டது.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# விதைப்பரிசோதனை செய்ய விவசாயிகளுக்கு அழைப்பு!

விவசாயத்தில் முக்கிய பங்கு வகிக்கும் இடுபொருள் விதை. தரமான விதைகளை விதைப்பதன் மூலமே அதிக மகசூல் பெற முடியும். தரமான விதை என்பது விதைச்சான்று துறையினரால் பல கட்டங்களில் வயல் மட்ட ஆய்வு மற்றும் விதைப்பரிசோதனை செய்யப்பட்ட சான்று விதைகளே ஆகும். விதைப்பரிசோதனை நிலையத்தில் புறத்தூய்மை, ஈரப்பதம், முளைப்புத்திறன், பிறரக கலப்பு என்று 4 விதமான பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

புறத்தூய்மை என்பது விதையின் சுத்தத்தை குறிப்பதாகும். அதில் களை விதைகள், பிற பயிர் விதைகள், உயிர்ப்பற்ற பொருள் ஆகியவை பரிசோதிக்கப்படுகிறது. ஈரப்பதம் என்பது பயிர் வாரியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதில் நிர்ணயிக்கப்பட்ட அளவை விட அதிகமாக இருந்தால் அதிக பூச்சி தாக்குதல் மற்றும் நுண்ணுயிர் தாக்குதலுக்கு உட்பட்டு தரம் குறைய வாய்ப்புள்ளது.

முளைப்புத்திறன் பரிசோதனையில் விதை மாதிரிகளின் முளைப்புத்திறன் பரிசோதிக்கப்படுகின்றன. ஒவ்வொரு விதைக்கும் குறிப்பிட்ட முளைப்புத்திறன் நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. முளைப்புத்திறன் குறைந்தால் பயிர் எண்ணிக்கை குறைந்து மகசூல் பாதிக்கும். விதைச்சட்டம் 1966 பிரிவு 7(பி) இன் படி ஒவ்வொரு பயிருக்கும் குறைந்தபட்ச முளைப்புத்திறன் தரம் நிர்ணயம் செய்து அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி நெல்லுக்கு 80 சதவிகிதமும், வீரிய மக்காச்சோளத்திற்கு 90 சதவிகிதமும், கம்பு, சோளம், கேழ்வரகு, சாமை, குதிரைவாலி, உளுந்து, துவரை, பாசிப்பயறு ஆகிய பயிர்களுக்கு 75 சதவிகிதமும், நிலக்கடலைக்கு 70 சதவிகிதமும், எள்ளிற்கு 80 சதவிகிதமும், காய்கறிப் பயிர்களான கத்திரி, தக்காளி, வெங்காயம், கொத்தவரை, கீரை வகைகளுக்கு 70 சதவிகிதமும், மிளகாய், பூசணி, பரங்கி, புடல், பாகல், பீர்க்கன், தர்பூசணிக்கு 60 சதவிகிதமும் வெண்டை, கொத்தமல்லிக்கு 65 சதவிகிதமும் முளைப்புத்திறன் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

பிறரக கலப்பு என்பது ஒரே பயிரில் பல்வேறு ரக விதைகள் கலந்திருப்பது ஆகும். குறிப்பிட்ட அளவுக்கு மேல் பிறரக கலப்பு இருந்தால் விதைகள் விற்பனைக்கு பரிந்துரைக்கப்படுவ தில்லை. இதன் மூலம் வேளாண்மை துறையினரால் விதைப் பண்ணை அமைக்கப்பட்டு உற்பத்தி செய்யப்படும் விதை களுக்கும், தனியார் உற்பத்தியாளர்களின் விதைகளுக்கும் விதைப்பரிசோதனை அடிப்படையிலேயே சான்று அளிக்கப் படுகிறது. இதன் மூலம் தரமான விதைகளை உற்பத்தி செய்து விற்பனை செய்ய பரிசோதனை முடிவுகள் பயன்படுகின்றன.

விவசாயிகள், விதை விற்பனையாளர்கள் மற்றும் உற்பத்தியாளர்கள் தங்களிடம் இருப்பில் உள்ள விதைகளின் தரத்தை அறிய பகுப்பாய்வு முடிவுகள் பயன்படுகின்றன. விதைப்பரிசோதனை ஆய்வுக் கட்டணமாக பணி விதை மாதிரி ஒன்றுக்கு ரூ.80 மட்டும் வசூலிக்கப்படுகிறது.

ஆய்வு செய்யக்கூடிய விதையினை கட்டணத்துடன் நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ மூத்த வேளாண்மை அலுவலர், விதைப்பரிசோதனை நிலையம், முதல் குறுக்குத் தெரு, திண்ணப்பா நகர், காந்தி கிராமம், கரூர் 4 என்ற முகவரிக்கு அனுப்பலாம்.

பணி விதை மாதிரிகள் விதைப்பரிசோதனை நிலையத்திற்கு பகுப்பாய்விற்கு அனுப்பும் போது விதை மாதிரியின் அளவு நெல் விதை 50 கிராம், உளுந்து, பாசிப்பயறு 100 கிராம், மக்காச்சோளம், நிலக்கடலை 500 கிராம், எள், ராகி 25 கிராம் காய்கறிப் பயிர்களான கத்திரி, தக்காளி, மிளகாய் - 10 கிராம், சுரை, பரங்கி, வெள்ளரி - 100 கிராம், பாகல், புடல் - 250 கிராம், ஆகிய அளவில் விதை மாதிரி எடுத்து தங்களது முழு முகவரியுடன் கூடிய கடிதத்துடன் மேற்கண்ட முகவரிக்கு அனுப்பி விதையின் முளைப்புத்திறன் அறிந்து தரமான விதைகளை பயன்படுத்தி அதிக மகசூல் பெற வேண்டுமாறு கரூர் விதைப்பரிசோதனை நிலைய மூத்த வேளாண்மை அலுவலர் க.ரமேஷ்குமார் தெரிவித்துள்ளார்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

# மிளகாய் சாகுபடியில் விவசாயிகள் தீவிரம்!

திருவாரூர், ஏப்.16

திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் அருகே உள்ள சித்தமல்லி, வெள்ளங்குழி, நடுப்படுகை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் பல ஆண்டுகளாக கோடை சாகுபடியாக கத்தரி, மிளகாய், வெண்டை, சோளம், பருத்தி உள்ளிட்ட பல்வேறு வகையான சாகுபடிகளை விவசாயிகள் செய்து வருகின்றனர். இந்நிலையில் நடுப்படுகை பகுதியில் மிளகாய் சாகுபடி செய்துள்ள விவசாயிகளின் வயல்களில் மிளகாய் பழுத்து அறுவடைக்கு தயாராகி வருகிறது.



# மாடுகளை நோய் தாக்காமல் இருக்க கடைப்பிடிக்க வேண்டிய வழி முறைகள்

தொற்று நோய் என்பது ஒரு மாட்டிலிருந்து மற்ற மாடுகளுக்கு நேர்முகமாகவோ அல்லது மறைமுகமாகவோ பரவி அதிக அளவு பொருளாதார இழப்பு மற்றும் இறப்;பினை ஏற்படுத்தும் நோயாகும். தொற்று நோய் வெவ்வேறு வகையான கிருமிகளால் ஏற்படுகிறது.

தோற்று நோய் என்பது எல்லா வித தட்பவெப்ப நிலைகளிலும், அனைத்துக் காலங்களிலும், வயது வித்தியாசமில்லாமல் அனைத்து மாடுகளையும் கன்றுகளையும் பாதிக்கக்கூடியது. தொற்று நோயால் பாதிக்கப்பட்ட மாடுகளை அதன் அறிகுறி களிலிருந்து மாடுகளை வளர்ப்பவர்கள் எளிதில் கண்டறிந்து கொள்ள முடியும். அவ்வாறு தொற்று நோயால் பாதிக்கப்பட்ட மாடுகளை கண்டறிந்து கால்நடை மருத்துவரின் உதவியுடன் தகுந்த சிகிச்சையை விரைவில் மேற்கொள்வதன் மூலம் தொற்று நோயால் ஏற்படும் பொருளாதார இழப்பிலிருந்து மாடுகளைக் காப்பாற்றி விட முடியும்.

**நோய்க்கான அறிகுறிகள்**

நோயுற்ற கன்றுகள் மற்றும் மாடுகளில் அதிக அளவு காய்ச்சல் இருக்கும். தொற்று நோயால் பாதிக்கப்பட்ட கன்றுகள் மற்றும் மாடுகள் மற்றும் மிகவும் சோர்ந்து, ரோமம் சிலிர்த்துக் காணப்படும். அசை போடாது, தீவனம் எடுக்காது. கறவை மாடுகளில் பால் வெகுவாகக் குறைந்து விடும். கண்கள் சிவந்து, கண்களிலிருந்து நீர் வடியும். சில சமயம் மூச்சுத் திணறல் ஏற்படும். மூக்கு வறண்டு, சில சமயம் வெடிப்பும் ஏற்படும். மூக்கு, வாய் போன்றவற்றில் நீர் வடியும். சில சமயம் துர்நாற் றத்துடன் சளி வடியும். சாணம் இறுகிக் கட்டியாகவோ அல்லது இளகிக் கழிச்சலாகவோ வெளிவரும். அடிக்கடி சிறுநீர் கழிக்கும். அதிக எண்ணிக்கையிலான மாடுகள் ஒரே சமயத்தில் பாதிக்கப் படும்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

## பொதுவான நோய்த் தடுப்பு முறைகள்

● கறவை மாடுகளின் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க வேண்டும். நோய் எதிர்ப்புத் திறன் அதிகமுள்ள மாடுகள் மற்றும் கன்றுகள் தொற்று நோய்களால் பாதிக்கப்படுவதில்லை. இதற்கு மாடுகளுக்கும் கன்றுகளுக்கும் தவறாமல் கால்நடை மருத்துவரின் ஆலோசனைப்படி உரிய காலத்தில், தக்க நோய்த் தடுப்பு+சிகளைப் போட வேண்டும்.

● கால்நடை மருத்துவரின் ஆலோசனைப்படி கன்றுகளுக்கும் மாடுகளுக்கும் தகுந்த இடைவெளியில் குடற்புழு நீக்க மருந்துகள் கொடுப்பதால் கன்றுகள் மற்றும் மாடுகளின் ஆரோக்கியம் பாதுகாக்கப்படுவதால் நோய்த்தொற்று ஏற்படும் வாய்ப்புகள் குறையும்.

● தரமான நச்சுத் தன்மையற்ற தீவனம், போதுமான இடவசதியுடன் கூடிய சுகாதாரமான கொட்டகை, மோசமான தட்பவெப்பநிலைகளிலிருந்து பாதுகாப்பு போன்றவற்றை அளிக்க வேண்டும். கன்றுகளுக்கு சீம்பால் கொடுக்க வேண்டும். இதனால், இளங்கன்றுகளுக்கு நோய் எதிர்ப்புத் திறன் கிடைக்கிறது.

● சத்துப்பற்றாக்குறையால் மாடுகளுக்கு நோய் எதிர்ப்பு சக்தி குறையும் பொழுது நோய்த்தொற்று ஏற்பட வாய்ப்பிருப்பதால் மாடுகளுக்கு அதன் உடல் நலத்திற்கும், உற்பத்திக்கும் போதுமான சத்தான தீவனம் அளிக்கப்பட வேண்டும்.

● நோய்க்கிருமிகள் மற்ற பண்ணைகளிலிருந்தும் வர வாய்ப்பிருக்கிறது. உயிருள்ள அல்லது உயிரற்ற பொருட்கள் மூலம் கிருமிகள் பண்ணைக்குள் வரக்கூடும். நோயுற்ற பசுக்களை வாங்கி பண்ணைக்குள் விடுவது, பார்வையாளர்களைக் கட்டுப் பாடில்லாமல் அனுமதிப்பது, பறவைகள், எலி, பூனை போன்ற விலங்கினங்கள் பண்ணைக்குள் புகுந்து நோய்க் கிருமிகளைப் பரப்ப வாய்ப்புள்ளது. பண்ணையில் பயன்படுத்தப்படும் உயிரற்ற பொருட்கள், உதாரணமாக லாரிகள் போன்ற வண்டிகள், தீவன மூட்டை, வாளி போன்ற பொருட்கள் மூலமாகக் கிருமிகள் பண்ணைக்குள் வர வாய்ப்புகள் உள்ளன. பண்ணையின் பொதுச் சுகாதாரம் சரியாகப் பராமரிக்கப்பட வில்லையெனில் நோய்கள் பரவும். அதே சமயத்தில் கிருமி நாசினி மருந்து கொண்டு தினமும் தொழுவத்தையும், சுற்றுப் புறத்தையும் சுத்தம் செய்தால் இக்கிருமிகள் எண்ணிக்கை வெகுவாகக் குறையும். கிருமிநாசினி மருந்தைப் பயன்படுத்துவதற்கு முன்பு தரை, மாடு நிற்கும் இடம் போன்றவற்றை நன்கு கழுவி சுத்தம் செய்ய வேண்டும். இல்லையேல் கிருமி நாசினி மருந்தின் முழுப் பயனையும் பெற முடியாது. கிருமி நாசினி மருந்துகளில் பீனால், லைசால், பொட்டாசியம் பெர்மாங்கனேட், பார்மலின், சுண்ணாம்புத் தூள்,

ப்ளீச்சிங் பவுடர், சேவ்லான் போன்றவை முக்கியமானதாகும். அடுத்துப் பண்ணைக்குள் நுழையும் வாயிலில் கிருமி நாசினி மருந்து கலந்த தண்ணீரில் பண்ணைக்குள் நுழையும் அனைவரும் பாதங்களை நனைத்துப் பின் உள்ளே அனுமதிக்கப்பட வேண்டும். வாகனங்களைப் பண்ணைக்கு வெளியே நிறுத்தி விடுவது நல்லது. இவ்வாறு செய்வதால் நோய்க்கிருமிகள் பண்ணைக்குள் வருவதைத் தடுக்கலாம்.

● தீவனம் மற்றும் தண்ணீர்த் தொட்டியைத் தினமும் சுத்தம் செய்ய வேண்டும். வாரம் ஒரு முறையாவது தண்ணீர் தொட்டிக்கு சுண்ணாம்பு அடிக்க வேண்டும். சாணத்தை 300 அடிக்கு அப்பால் எடுத்துச் சென்று உரக்குழியில் கொட்டுதல் அவசியம்.

● பால் கறக்கும் போது பால் தரையில் சிந்தக் கூடாது. அவ்வாறு சிந்த நேர்ந்தால் உடனே கழுவி விட வேண்டும். இல்லையேல் ஈ மொய்த்து நோய் பரவ வாய்ப்புண்டு. அதே போல் பால் கறக்கும் போது மடியை நன்கு கழுவுதல் மிகவும் அவசியம். பிறகு கிருமி நாசினி கொண்டு சுத்தம் செய்வது நல்லது. பால் கறக்கும் நபர் கைகளைக் கிருமி நாசினியால் நன்கு சுத்தம் செய்த பிறகே பால் கறக்க வேண்டும். பால் கறக்கும் இயந்திரம் பயன்படுத்தும் போது கறவை முடிந்தவுடன் பால் இயந்திரத்தின் இரப்பர் பாகம் அனைத்தையும் நன்கு கழுவி சுத்தம் செய்ய வேண்டும். பால் காம்பைக் கறக்கும் முன்பும் கறந்த பின்பும் 0.5 சதவிகிதம் பொட்டாசியம் பெர்மாங்கனேட் கிருமி நாசினி கலவை கொண்டு கழுவ வேண்டும். தீவனக் கிடங்கிற்குள் எலி நுழையாமல் இருக்க வேண்டிய ஏற்பாடு செய்ய வேண்டும்.

● நோயுற்ற பசுக்களைப் பிரித்துத் தனியாகப் பராமரிக்க வேண்டும். புதிதாக மாடுகளை வாங்கும் போது இரத்தப் பரிசோதனை செய்யும் கால்நடை மருத்துவர் கொண்டு பரிசோதனை செய்து வாங்குவது நல்லது. புதிதாக வாங்கிய மாடுகளைக் குறைந்தது 15 நாட்களுக்குத் தனியாக வைத்துப் பராமரித்து நோய் இல்லையென முடிவு செய்த பின்பு மற்ற மாடுகளோடு சேர்த்து வளர்க்கலாம். முடிந்தவரை பண்ணையிலுள்ள மாடுகள் வெளியில் சென்று மேய்வதையும், மற்ற மாடுகளோடு கலப்பதையும் அறவே தவிர்க்க வேண்டும். அதே போல் வெளி மாடுகளையும் பண்ணைக்குள் நுழைய விடக் கூடாது. மாடுகள் நோயுற்றால் உடனே அருகிலுள்ள கால்நடை மருத்துவரை அணுகித் தேவையான சிகிச்சையை மேற்கொள்ள வேண்டும்.

தகவல் : ***டாக்டர். இரா. உமாராணி, பேராசிரியர், கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆய்வு மையம், திருப்பரங்குன்றம், மதுரை – 625 005.***

**Rithvik Pipe**

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்**
  நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**